செ.வெ.எண்.68 நாள்: 30.07.2020

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சொக்கலிங்கபுரம், மகாராஜாபுரம், பல்லாகுளம் ஆகிய பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்.

----------------------------------------------------------------------------------------------------

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சொக்கலிங்கபுரம், மகாராஜாபுரம், பல்லாகுளம் ஆகிய பகுதிகளில் உள்ள பொதுமக்களின் பல்வேறு கோரிக்கைககள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (30.07.2020) கள ஆய்வு மேற்கொண்டார். ஆய்வில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.சின்னப்பன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சொக்கலிங்கபுரத்தில் விவசாய பொதுமக்களின் சார்பில் வேளாண் பொருட்களை இருப்பு வைப்பதற்கு நமக்கு நாமே திட்டத்தின்கீழ் வேளாண் பொருட்கள் சேமிப்பு கிட்டங்கி அமைத்து தர வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். கிட்டங்கியில் மக்காச்சோளம், உளுந்து, பாசிப்பயறு, கம்பு உள்ளிட்ட விளைபொருட்களை பாதுகாப்பாக இருப்பு வைத்து வியாபாரம் செய்ய உதவிட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். இதையடுத்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வேளாண் பொருட்கள் சேமிப்பு கிட்டங்கி கட்டப்படும் இடத்தினை பார்வையிட்டார். விவசாய பெருமக்களின் கோரிக்கையினை நிறைவேற்றிட நடவடிக்கை எடுக்கப்படும் என உத்தரவிட்டார்.

தொடர்ந்து தத்தனேரி ஊராட்சி மகாராஜாபுரத்தில் குடிநீர் கிணறு சேதம் அடைந்துள்ளதை தூர்வாரி ஆழப்படுத்தி குடிநீர் வசதி செய்து தர வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். அந்த கிணறு பகுதியை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு, கிணற்றினை சீரமைக்கவும், ஆழப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும் நெடுங்குளம் ஊராட்சி பல்லாகுளத்தில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி மிகவும் பழுதடைந்து பயன்படுத்தப்படாமல் உள்ளது என்றும், அதனை அகற்றிவிட்டு புதிய மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைத்து தர வேண்டும் என்றும், பல்லாகுளம் பகுதியில் உள்ள மேலக்கண்மாயினை தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்திருந்தனர். இதையடுத்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், பல்லாகுளத்தில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டியை பார்வையிட்டு, ஊரக வளர்ச்சி துறையின் மூலம் புதிய மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைக்க

நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். மேலும் மேலக்கண்மாயினை ஊரக வளர்ச்சி துறையின் மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் கண்மாய் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள தகுந்த திட்ட வரைவு தயார் செய்து நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது, கோவில்பட்டி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.விஜயா, விளாத்திகுளம் வட்டாட்சியர் திரு.ராஜ்குமார், விளாத்திகுளம் ஒன்றியக்குழு தலைவர் திரு.இனியசக்தி ராமசந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.பாலசுப்பிரமணியன், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் திரு.ஜாகீர்உசேன், மாவட்ட கவுன்சிலர் திரு.நடராஜன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.தங்கவேலு, திரு.மாணிக்கவாசகம், ஊராட்சி மன்ற தலைவர்கள் திருமதி.ஜெயலட்சுமி (நெடுங்குளம்), திரு.உமாசங்கர் (மகாராஜாபுரம்), முக்கிய பிரமுகர்கள் திரு.பால்ராஜ், திரு.என்.கே.பி.வரதராஜபெருமாள், திரு.செல்வபெருமாள் மற்றும் அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.